MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# சங்க இலக்கியங்களும் திருக்குறளும் வெளிப்படுத்தும் வேளாண் மேலாண்மைச் சிந்தனைகள்

முனைவர் க. கருப்பசாமி
உதவிப்பேராசிரியர் - தமிழ்,
அறிவியல் மற்றும் மானுடவியல்துறை,
ஏஏஏ பொறியியல் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி,
ஆமத்தூர், சிவகாசி, தமிழ்நாடு.

# Agricultural Management Thought as Reflected in Sangam Literature and the Thirukkural

**Dr. K. Karuppasamy**
Assistant Professor – Tamil
Department of Science and Humanities
AAA College of Engineering and Technology
Amathur, Sivakasi, Tamil Nadu

MARCH - APRIL

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

**Abstract**

Agriculture is a vital sector that ensures the production of food, the fundamental necessity of human life. In ancient Tamil society, agriculture was not merely an economic activity but functioned as an integrated system encompassing managerial skills. This study examines agricultural practices found in classical Tamil texts, particularly Sangam literature and the Thirukkural, and brings out the embedded management principles within them.

Literary evidence indicates that processes such as land selection, ploughing, sowing, irrigation, weeding, and harvesting were carried out in a planned and systematic manner. Furthermore, managerial aspects such as the selection of competent workers, delegation of responsibilities, adaptation to seasonal changes, and efficient utilization of resources are clearly evident. The study emphasizes that the agricultural knowledge and management practices of the ancient Tamils serve as a precursor to modern sustainable agricultural systems.

**Keywords**

Agriculture, Management, Sangam Literature, Thirukkural, Sustainable Agriculture, Resource Management, Climate Awareness, Farming

**சுருக்கம்**

வேளாண்மை மனித வாழ்வின் அடிப்படைத் தேவையான உணவின் உற்பத்தியை உறுதி செய்யும் முக்கியத் துறையாகும். பண்டைய தமிழ் சமூகத்தில் வேளாண்மை ஒரு பொருளாதாரச் செயலாக மட்டுமல்லாது, மேலாண்மைத் திறன்களைக் கொண்ட ஒருங்கிணைந்த அமைப்பாக விளங்கியது. இக்கட்டுரை, சங்க இலக்கியங்கள் மற்றும் குறள் போன்ற பாரம்பரிய தமிழ் நூல்களில் காணப்படும் வேளாண் நடைமுறைகளை ஆய்வு செய்து, அவற்றில் உள்ள மேலாண்மைச் சிந்தனைகளை வெளிக்கொணர்கிறது.

நிலத் தேர்வு, உழுதல், விதைத்தல், நீர்ப்பாசனம், களைஎடுத்தல் மற்றும் அறுவடை போன்ற செயல்முறைகள் திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இலக்கிய ஆதாரங்கள் காட்டுகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மேலும், தகுதியான பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து பொறுப்பளித்தல், காலநிலை மாற்றங்களுக்கேற்ப செயல்படுதல், வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் போன்ற மேலாண்மை அம்சங்களும் தெளிவாகக் காணப்படுகின்றன. பண்டைய தமிழரின் வேளாண் அறிவு மற்றும் மேலாண்மைத் திறன்கள் நவீன நிலையான வேளாண்மை முறைகளுக்கு முன்னோடியாக விளங்குகின்றன என்பதை வலியுறுத்துகிறது.

**முக்கியச் சொற்கள்**

வேளாண்மை, மேலாண்மை, சங்க இலக்கியம், திருக்குறள், நிலையான வேளாண்மை, வள மேலாண்மை, காலநிலைப் புரிதல், உழவுத் தொழில்

## முன்னுரை

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது உணவு ஆகும். உணவின் உற்பத்தியை உறுதி செய்யும் முக்கியத் தொழிலாகவே வேளாண்மை உலகளவில் கருதப்படுகிறது. குறிப்பாக, பண்டைய தமிழ் சமூகத்தில் வேளாண்மை ஒரு சாதாரண தொழிலாக அல்லாது, சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு அடித்தளமாக விளங்கியது. இத்தகைய வேளாண் செயல்பாடுகள் திட்டமிடல், பணியாளர் தேர்வு, காலநிலைப் புரிதல், வள மேலாண்மை போன்ற மேலாண்மைக் கூறுகளை உட்கொண்டிருந்தன. பண்டைய தமிழ் இலக்கியங்கள், குறிப்பாக சங்க இலக்கியங்களும் குறள்களும், வேளாண்மை தொடர்பான அறிவியல் மற்றும் மேலாண்மைச் சிந்தனைகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. வேளாண் செயல்முறைகளில் நிலத் தேர்வு, உழுதல், விதைத்தல், நீர்ப்பாசனம், களைஎடுத்தல், பாதுகாப்பு மற்றும் அறுவடை போன்ற கட்டங்கள் முறையாகப் பின்பற்றப்பட்டுள்ளன. இவை அனைத்தும் திட்டமிட்ட மேலாண்மையின் சான்றுகளாகக் கருதப்படுகின்றன.

மேலும், பணியைச் செய்யத் தகுதியான நபரைத் தேர்ந்தெடுத்து

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

பொறுப்பளிப்பது, காலநிலைக்கேற்ப செயல்படுதல், வளங்களைச் சரியாகப் பயன்படுத்துதல் போன்ற மேலாண்மைச் சிந்தனைகள் இன்றைய நவீன மேலாண்மை கோட்பாடுகளோடு ஒப்பிடத்தக்கதாகும். இக்கட்டுரை, பண்டைய தமிழரின் வேளாண் நடைமுறைகளில் உள்ள மேலாண்மைத் திறன்களை இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வேளாண் மேலாண்மை

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. ஒவ்வொருவருடைய பெருமைக்கும், சிறுமைக்கும் அவரது செயல்களே காரணமாக அமைகின்றன. ஆனால் ஒருவர் சிறந்த பண்பினைப் பெற அடிப்படையாக இருக்க வேண்டியது வறுமையின்மை. உணவு இன்றேல் பண்பாடு இல்லை. ஆதலின் உணவுப் பொருளின் இன்றியாமையாத தேவை உணர்ந்து பழந்தமிழர்கள் உழவுத் தொழிலை தலைமைத் தொழிலாகச் செய்து வந்தனர். உலகில் உள்ள எல்லாத் தொழில்களைவிடத் தலைசிறந்த தொழிலாக உழவே விளங்குகிறது. ஆதனால் தான் வள்ளுவர்,

“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்

உழந்தும் உழவே தலை” (குறள்.1031)

என்றும்,

“உழவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது

எழுவாரை எல்லாம் பொறுத்து” (குறள்.1032)

என்றும் கூறுகிறார்.

‘மேலாண்மையென்பது மக்களுடன் இயங்கி மக்களிடையே நிறைவேறும் பணிகளைத் தருவது மேலாண்மை ஆகும்’ என்கிறார் மேலாண்மைத்துறை முன்னோடி ஹென்பார்டு. (மேலாண்மைத்துறை முன்னோடி ஹென்பார்டு (கூடல்.காம்)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

அறிஞர் கூன்ட்ஸ் ஓடொன்ஸ் என்பவர், செய்து முடிக்க வேண்டிய எந்தவொரு பணியையும் அதற்குரிய பணியாளர்கள் மூலமாகச் செய்து முடிப்பதே மேலாண்மை என்று விளக்கம் அளித்துள்ளார். இக்கருத்தை ஈறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" (குறள்.517)

என்ற குறளில் குறிப்பிட்டுள்ளார். வுpனையின் தன்மை, செய்யும்முறை, செய்பவரின் திறன் இவற்றை இணைத்து ஆராய்ந்து எந்தத் தொழிலுக்கு யார் பொருத்தமானவரோ அவரிடம் விடுவதே சிறந்த வேளாண்மை பண்பாகும். இத்தகைய மேலாண்மைப் பண்பை பழந்தமிழர்கள் நன்கு கைவரப் பெற்றவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

ஆண்டுதோறும் கோடைக்காலம், மழைக்காலம், குளிர்காலம் எனக் காலங்கள் மாறி மாறி வருகின்ற இயற்கையைச் சார்ந்து வாழும் மனிதனம் மாற்றங்களை ஏற்றுக் கொண்டு காலத்திற்கேற்ப விதைகளை விதைக்கத் தொடங்கியதுவே சிறந்த வேளாண் மேலாண்மையாக அமைகின்றது. வேளாண்மையில் ஏர் உழவேண்டும், எருவிட வேண்டும், களையெடுக்க வேண்டும், போதிய அளவிற்கு நீர்ப்பாய்ச்ச வேண்டும். இப்பயிர்களுக்கு போதிய காவல் செய்யும் திறனில் உழவர்கள் சிறந்த நேர மேலாண்மையைக் கையாண்டுள்ளனர்.

**வேளாண்மை - விளக்கம்**

வேளாண்மை என்பதற்கு, 'பயிர்த்தொழில், உதவிபுரிதல், கொடை, உண்மை' என்று தமிழ்-தமிழ் அகரமுதலி விளக்கம் தருகிறது. தொல்குடியினர் வேளாண்மை என்ற சொல்லிற்கு 'உதவி' என்று பொருள் கொள்கின்றனர். இதனைத் தொல்காப்பியர்,

"வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தினும்" (தொல்.பொருள்.களவு.1060-23)

ஏன்ற தொல்காப்பியத்தில் 'வேளாண்' என்ற சொல்லை மூன்று இடங்களில் குறிப்பிடுகிறார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

மேலும்,

"இருந்தோம்பி இல்வாழ்வு தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள்.81)

என்று திருக்குறளில் வள்ளுவர், வேளாண்மை என்ற சொல்லிற்கு 'உதவி' என்ற பொருளையே குறிக்கிறார். இச்செய்தியானது சங்க இலக்கியத்திலும் கையாளப்பட்டுள்ளதை,

"கேள் அல்கேளிர் வேளாண் சிறுபதம்
வேளாண் வாயில் வேட்பக் கூறி" (புறம்.74)

என்ற வரிகள் தெளிவுபடுத்துகின்றன. உதவி என்ற சொல்லை நுனிதறிந்து நோக்கின் பிறருக்கு உதவி செய்யும் பண்பே வேளாண்மையாகும்.

## வேளாண்மையின் தோற்றம்

பழங்காலத்தில் மனித இனம் தனது இனக்குழுக்களை பாதுகாத்துக் கொள்ள உணவைத் தேடி அழைந்தனர். ஆவ்வாறு அலைந்து திரிந்த காலகட்டத்தில் தங்களுக்குக் கிடைத்த உணவை உண்டு, மீதம் உள்ளதை பாதுகாக்க தொடங்கினார்கள். இனக்குழு மக்கள் வசித்துவந்த இடங்களைச் சுற்றியுள்ள மரம், செடி, கொடிகள், காய்கறகள், கிழங்குகள், விதைகள் என அனைத்தையும் சேகரித்து தனது வாழ்க்கை ஆரம்பிக்கத் தொடங்கியிருக்க வேண்டும். இவ்வாறு மக்கள் பயன்படுத்திய விதை மற்றும் தானியங்களைக் கொல்லைப் புறத்தில் எறிந்திருக்க வேண்டும் இவ்விதகள் நாளடைவில் முளைக்கத் தொடங்கியிருக்கும். இதைக்கண்ட பெண்கள் முளைக்கத் தொடங்கியப் பயிர்களை மிக நுணுக்கமாகப் பக்குவப்படுத்தி, பயிர்கள் வளர்வதைக் கண்டு பயிர்த் தொழில் செய்யக் கற்றுக்கொண்டனர். இதன்மூலம் பெண்களே வேளாண்மைத் தொழில் செய்யக்காரணமாக இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

## வேளாண்மைத் தொழிலின் செயல்முறைகள்

`உழவுத் தொழில் மிகவும் உயர்ந்தது. உழவே உலகின் பசியைப்போக்கி

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

உயிர்களைக் காத்து நிற்கும் அறத்தொழிலான உழவின் சிறப்பை,

"ஏரும் இரண்டுதளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய் - ஊரருகே
சென்று வரஎளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது" (தனிப்பாடல் திரட்டு.104)

என்னும் தனிப்பாடல் மூலம் உழவே இனிய தொழில் என்கிறார் ஔவையார்.

**உழவு – விளக்கம்**

உழவு என்பதற்கு, 'நிலத்தை உழும்தொழில், வேளாண்மை: உடம்பினால் உழகைகை' என்று தமிழ்-தமிழ் அகரமுதலி விளக்கம் தருகிறது.

வேட்டைச் சமூகமாக இருந்த மனித சமூகம், பண்பட்ட சமூகம் ஆனதற்கு முதற்காரணம் உழவுத் தொழில். சமவெளிகளில் தங்கிவிட்ட மனிதன் கண்டுபிடித்த முதற்தொழில் உழவுதான். உழவுத்தொழில் செய்வதன் மூலம்தான் மனிதன் மிருகங்களிடமிருந்து மேம்பட்டவனாகக் கருதப்படுகிறான். 'உழவே அறிவியல்களிலெல்லாம் உயர்ந்த அறிவியல்' என்று டாக்டர் ஜான்சன் கூறுகிறார். உழவு இல்லையென்றால் உணவ இல்லை. உணவு இல்லையென்றால் உயிர்கள் இல்லை. உயிர்கள் இல்லையென்றால் உலகு இல்லை. இதனாலையே உலகம் தோன்றியகாலம் தொட்டு இன்று வரை உழவுத் தொழிலைப் போற்றியும், உழவர்களை நம்பியும் சுழன்று கொண்டிருக்கிறது என்பதை,

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை" (குறள்.1031)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

என்னும் குறள் மூலம் எப்பேற்பட்ட உடல்வருத்தம் ஏற்பட்டுத் துன்புற்றாலும் உழவுத்தொழிலே தலையாயாது என்பதை வள்ளுவர் இவ்வுலகிற்கு பறைசாற்றுகிறார். இதனையே,

"உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்,

பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு" (நல்வழி.12:3-4)

என்னும் பாடல் மூலம், உழவுத்தொழில் இல்லையென்றால் உலகில் எத்தொழிலும் இல்லையென்று மார்தட்டிக் கூறலாம் என்று ஔவையார் கூறுகிறார். மேலும் பாரதியார் உழவின் மேன்மையை, "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று உழவின் மேன்மையை எடுத்தியம்பியுள்ளார். வள்ளுவர் உழவின் மேன்மையை,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்" (குறள்.1033)

என்னும் குறள்வழி உயர்த்திக் காட்டுகிறார்.

**உலகிற்க அச்சாணி உழவுத்தொழில்**

உழவுத்தொழிலே உலகைத்தாங்கும் முதல் அடிப்படையான வாழ்வாதாரத் தொழில். அத்தொழிலைச் செய்து உலகை வாழ்விக்கும் உழவர்களே உலகைத் தாங்கி நிலைநிறுத்தும் ஆணியாக நிற்கிறார்கள் என்பதை,

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது

எழுவாரை எல்லாம் பொறுத்து" (குறள்.1032)

வள்ளவப்பெருந்தகை இக்குறளில் வலியுறுத்துகிறார்.

**உழவின் மேன்மை**

உழவுத்தொழில் செய்து எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் கிடைத்ததை உண்டு மகிழ்வுடன் வாழக்கூடியவர்கள் உழவர்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

ஆவ்வாறான மனநிம்மதியைத்தரும் தொழில் எதுவென்றால் இவ்வுலகிலேயே ஒரே ஒருதொழில் உழவுத்தொழில் மட்டுமே. இவ்வுழவத்தொழிற்கு நிகர் வேறெதுவமில்லை. முற்ற தொழில்கள் எல்லாம் மனிதர்களுக்கு கேடு உண்டாக்கும். ஏவ்வித கேடில்லாத தொழில் என்றால் உழவுத் தொழில் தான். இவ்வாறான உழவுத் தொழிலை ஆர்வத்துடன் செய்யும் உழவர்கள் என்றுமே அழகாகத்தான் தென்படுகின்றனர். இதனை,

"உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்" (வெற்றிவேற்கை.அழகு,7)

என்ற பாடலடி உழவுத்தொழில் செய்யாதவனை அறிவிலி என்றும், பருவநிலை மாற்றங்கள் அறிந்து,எந்தப்பருவத்தில் எந்த பயிர் விதைத்தால் விளைச்சல் கைகூடிவரும், உழைப்புக்கு பலன்கிடைக்கும் என்பதை, "பருவத்தே பயிர் செய்" (ஆ.சூ.22) என்று ஆத்திச்சூடி பகர்கின்றது. இதன்மூலம் நாட்டுமக்களின் நலன்கருதி அதிகமகசூலினை மிகுதியாக விளைவிக்கின்றனர் உழவர்கள்.

"சீரைத் தேடின் ஏரைத்தேடு" மனநிம்மதியுடன், மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்றால் உழவுத்தொழிலைத் தேர்ந்தெடுத்து செய்க என்று கொன்றைவேந்தனில்,

"மேழிச் செல்வம் கோழை படாது" (கொன்றைவேந்தன்.77)

என்று உழவுத்தொழில் செய்பவர்களுக்கு எந்நாளும் துன்பம் உண்டாகாது என்கிறது.

**உழவின் படிநிலைகள்**

உழவுத் தொழில் செய்வதற்கு சில படிநிலைகள் உண்டு. அவை,

ஈரநிழத்தில் புழுதி எழுஉழுதல்

உழுதநிலத்தில் விதை விதைத்தல்

களை எடுத்தல்

அறுவடை செய்தல்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

கதிரிலிருந்து பயிரைப் பிரித்தெடுத்தல்

என்ற நிலையில் அமைகின்றன. இதனைக் கபிலர்,

"கார்ப்பெயர் கலித்த பெரும்பாட்டு ஈரத்து

பூழி மயங்கப் பலவுழுது வித்தி" (புறம்.120:2-3)

என்னும் பாடலில் உயிரோட்டமாகப் படப்பிடித்துக் காட்டுகிறார்.

**நிலம் தேர்வு செய்வதில் மேலாண்மை**

வேளாண்மையில் மிக முக்கியமான ஒன்று நிலத்தைத் தேர்வு செய்வது. பண்டையத் தமிழர்கள் பருவநிலைக்கேற்றபடியும், நீரின் அளவினைப் பொறுத்தும் வேளாண்மை செய்தனர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் நாட்டினைப் பற்றிக் கூறுமிடத்து இடைக்காடனார் நன்செய், புன்செய் நிலங்களைப் பற்றிக் கூறியுள்ளார். இதனை,

"பெருவிறல் யாணர்த் தாகி யரிநர்

கீழ்மடைக் கொண்ட வாளையு முழவர்

................................................

................................................

வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தமரும்

மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந" (புறம்.42:12-18)

என்னும் பாடல் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. சோழமன்னன் செழிப்பான நீர்வளம் உடைய நாட்டை ஆட்சிபுரிகிறான் என்பதும், உழவுத் தொழில் செய்வதற்குரிய நிலத்தையும் கொண்டுள்ள மேலாண்மைத்திறனை பெற்றவன் என்பதும் புலனாகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

## உழுதலில் மேலாண்மை நுட்பம்

உழவன் தன் நிலத்தை நன்றாகப் பலமுறை உழுது, புழுதியை உலரவிட்டுப் பயிர் விளைவிப்பானேயானால், அந்தப் பயிர் எரு போட வேண்டிய இன்றியமையாமை இல்லாமலேயே செழித்துவளரும் என்பதை,

“தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்

வேண்டாது சாலப் படும்” (குறள்.1037)

என்ற குறளில் விளக்கம் தொடுக்கிறார் வள்ளுவர். தொடி – ஒரு பலம், கஃசு – காற்பலம் என்ற இவ்விரு சொற்களும் நிறுத்தலளவைக் குறிக்கும். நுpலத்தை ஒருமுறைக்கு பலமுறை உழவேண்டும் என்பதாகும். ‘அகல உழுவதைவிட ஆழ உழு’ என்பது உழவின் நுணுக்கத்தையும், ஆழ்ந்த அறிவின் தேவையையும் உணர்த்தும் பழமொழியாகும். மேலும்,

“ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்

நீரினும் நன்றுஅதன் காப்பு” (குறள்.1038)

என்னும் குறளில் உழவன் நிலத்தை உழுவதோடு, அதற்கு எரு இடுதலில் மிக்க ஆர்வம் காட்ட வேண்டும். பயிர்க்கு நீர் பாய்ச்சுவதோடு, அந்தப் பயிரைக் காப்பாற்றுவதில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும் என்று நிலத்தை பயன்படுத்தும் முறையைக் கூறுகிறார்.

வேளாண்மை செய்யும் நிலங்களில் பயிர்களைப் பயிரிடுவதற்கு முன்பு நிலத்தை ஆழமாகவும் மண்ணை மேலும், கீழும் புரளும்படியாகப் பலமுறை நன்கு உழுவர். நிலத்தைப் பலமுறை பூமி நெகிழும்படி பலமுறை உழுது விதைப்பதை,

“கார்ப்பெயல் கலித்த பெரும் பாட்டு ஈரத்து

பூழி மயங்காப் பல உழுது வித்தி

புல்லி ஆடிய பல் கிளைச் செவ்வி” (புறம்.120:2-4)

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

என்னும் பாடல் மூலம் தெரிகிறது. மேலும் பூமியே நெகிழும்படியாக உழுத தன்மையானது, எந்த ஒரு செயலையம் முழுமையாக செய்ய வேண்டும் என்ற மேலாண்மைத் தன்மையைக் காட்டுகின்றதை உணரமுடிகிறது.

மருதநில உழவர்கள் காளைகளைக் கலப்பையில் பூட்டி பயிரிடுவதற்கேற்ப சாலடித்து உழுதனர் என்பதை,

“குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்,
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
.............................................
தொடுப்பெறிந் துழுத தளர்படு துடவை” (பெரும்.197-201)

மேலும்,

“புன்புலம் வித்தும் வன் கை வினைஞர்
சீறுடைப் பல் பகடு ஒலிப்பப் பூட்டி
நாஞ்சில் ஆடிய கொழுவழி மருங்கின்
அலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்” (பதிற்றுப்பத்து.58:15)

என்னும் பாடல் வரிகள் மூலம் பண்டையத் தமிழர்கள் கொழுதேயும் அளவிற்கு வயலைச் சாலமைத்து உழுதுள்ள முறை நன்கு புலனாகிறது.

**முடிவுரை**

பண்டைய தமிழர்கள் வேளாண்மையை வெறும் வாழ்வாதாரத் தொழிலாக மட்டுமல்லாது, அறிவியல் மற்றும் மேலாண்மைத் திறன்களின் ஒருங்கிணைப்பாகக் கருதியுள்ளனர். நிலத் தேர்வு முதல் அறுவடை வரை ஒவ்வொரு கட்டத்திலும் திட்டமிடல், செயலாக்கம், கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற மேலாண்மை அம்சங்கள் தெளிவாகப் புலப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வேளாண்மைச் சிந்தனைகள், இயற்கையுடன் ஒத்துழைத்து வாழும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :7 /Issue 7 / MARCH 2026 E-ISSN 3049-3676 (Online)

வாழ்க்கை முறையையும், வளங்களைச் சிக்கனமாகவும் சீராகவும் பயன்படுத்தும் திறனையும் வெளிப்படுத்துகின்றன. இவை இன்றைய நிலையான வேளாண்மை முறைகளுக்கான முன்னோடியாகக் கருதப்படுகின்றன. ஆகவே, பண்டைய தமிழரின் வேளாண் மேலாண்மை அறிவு, காலத்தால் அழியாததாய் இருந்து, இன்றைய வேளாண் வளர்ச்சிக்கும், மேலாண்மை ஆராய்ச்சிக்கும் வழிகாட்டியாகத் திகழ்கிறது. இத்தகைய பாரம்பரிய அறிவுகளை ஆய்வு செய்து நவீன சூழலில் பயன்படுத்துவது அவசியமான ஒன்றாகும்.

## துணைநூற்பட்டியல்

1. நெடுஞ்செழியன். இரா, திருக்குறள் தெளிவுரை, பக்.189, நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளை, ஆழ்வார்பேட்டை, சென்னை-18, ஐந்தாம்பதிப்பு -2011.

2. சண்முகம்பிள்ளை.மு, தமிழ்-தமிழ் அகரமுதலி, பக்.1010, 175, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-113, பதிப்பு – 2015.

3. சுப்பிரமணியன்ச.வே, தொல்காப்பியம் தெளிவுரை, பக்.418, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை 108, பதினொன்றாம் பதிப்பு – அக்டோபர், 2010.

4. துரைசாமிப்பிள்ளை.ஔசை.சு, புறநானூறு, கழக வெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, பதிப்பு-2008

5. தாயம்மாள் அறவாணன், அவ்வையார் படைப்புக்களஞ்சியம், தமிழ்க்கோட்டம், அமைந்தகரை, சென்னை-29, பதிப்பு - 2017.

6. சுப்பிரமணிய பாரதி.சி, பாரதியார் கவிதைகள், கங்கை புத்தக நிலையம், தி.நகர், சென்னை-17, ஏழாம் பதிப்பு – ஆகஸ்ட்.2011

7. சோமசுந்தரனார்.பொ.வே, மதுரைக்காஞ்சி, கழக வெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, பதிப்பு-2008)

8. துரைசாமிப்பிள்ளை. ஔவை சு, பதிற்றுப்பத்து, கழக வெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, பதிப்பு-2008)